உ

ஸ்ரீவாணீ சகாயம்.

# கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

மாதப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபேறுநில்.

வெண்டாமரை ௩. | 1918-ம் ஆ ஜூலை மீ | இதழ் ௭.

## திருக்குறள் வியாசம்.

### ௧௦-ம் அதிகாரம்.

### இனியவை கூறல்.

உள்ளுறை:— (1) இன்சொல்லின் இலக்கணம். (2) இன்முகத்தோடுகூடிய இன்சொல் விருந்தோம்பலிலே சிறந்ததென்பது. (3) இனியவை கூறுபவர்க்கு இம்மைப்பயன். (4) மறுமைப் பயன். (5) கடுஞ்சொற் சொல்லுதலின் குற்றம். (6) முடிவுரை.

### விளக்கம்.

இனியவை கூறலென்பது மனத்திலுள்ள மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிற இனிய சொற்களைச் சொல்லுதலாம். *'இன்சொல்லாவன, அன்போடு கலந்து வஞ்சனையில்லனவா யிருக்கின்ற அறத்தினை யறிந்தவாது வாய்ச்சொற்களாகும்' என்று பெரியோர் இன்சொல்லுக் கிலக்கணம் கூறுவர். அறத்தினை யுணராதவர்கள் வாயில் இன்சொல் தோன்றுவது அருமை. அன்பின்றி

---

* இன்சொலா லீர மளைஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

உண்மையின்றிப் பேசுஞ் சொற்கள் மேலுக்கு இனியனவாகக் காணப்படினும் அவை உண்மையில் இன்சொற்களாகா.

இன்முகத்தோடு கூடிய இன்சொல் முன்னுகவே பிணித்துக்கொள்ளுதலால் விருந்தோம்பலில் சிறந்ததாகும். *'கண்ட பொழுதே முகமலர்ந்து அதனேடு இன்சொல்லையும் உடையவனைப் பெற்றால் அது மனமகிழ்ந்து ஒருவற்கு வேண்டியதொரு பொருளைக் கொடுத்தலினும் நல்லது' என்க. இன்முகத்தோடு கூடிய இன்சொல், ஈதல்போலப் பொருள் வயத்ததாகாமல் தன் வயத்ததாயினும், அறநெஞ்சுடையார்க்கே யல்லது மற்றவர்க்கு இயல்பாக உண்டாதலில்லை. ஆதலின் அறம் என்பது ஈதலின் கண்ணதன்று. †'கண்டபொழுதே முகத்தால் விரும்பி இனிதாக நோக்கி, பின்வந்தவிடத்து, மனத்துடனுகிய இனிய சொற்களைச் சொல்லுதலின் கண்ணதே அறம்' என்க.

இன்சொல் கூறுபவர் உலகில் இம்மைப்பயனை யெய்துகின்றனர். இன்சொல் எவர்க்கும் இன்பந்தருவது கண்கூடன்றே. இன்சொ லுடையவர்க்குப் பகைவர் அயலார் என்பதின்றி, யாவரும் நட்பினராதலால் அவர் எல்லாச் செல்வத்தையும் எளிதிலடைந்து இன்புறுகின்றனர். ஆதலின், ‡'யாவரிடத்தும் இன்பத்தை மிகுவிக்கும் இன்சொற்களை யுடையவர்கட்கு, துன்பத்தை மிகுவிக்கும் வறுமையானது இல்லை' என்க. மேலும் இன்சொல் உடையவனே உலகில் பலராலும் பெருமைப் படுத்தப்படுகிறான். இன்சொல்லே ஒருவனுக்கு எழிலையுண்டாக்குகின்றது. அதுபற்றியே, §'ஒருவனுக்கு அணி (ஆபரணம்) ஆவது,

---

* அகனமர்ந் தீதலி னன்றே முகனமர்ந்
தின்சொல னாகப் பெறின்.

† முகத்தா னமர்ந்தினி து நோக்கி யகத்தானு
மின்சொ லினதே யறம்.

‡ துன்புறூஉந் துவ்வாமை யில்லாகும் யார்மாட்டு
மின்புறூஉ மின்சொ லவர்க்கு.

§ பணிவுடைய னின்சொல னாத லொருவற்
கணியல்ல மற்றுப் பிற.

பெரியோரிடத்து வணக்கமுடையவனும் எல்லோரிடத்தும் இன்சொல்லையுடையவனு யிருக்கையாம்; இவ்விரண்டு மன்றி உடம்பிற்கணியும் பிற அணிகள் அணிகளாகா' என்று ஆன்றோர் அறைந்தனர். ஏனெனின் இவைபோல ஒருவனுக்கு அவ்வணிகள் பொழகு செய்யாமையின் என்க.

இன்சொல் இம்மைப் பயன்மட்டுமோ எய்துவிக்கின்றது? மறுமைப்பயனையும் அதுவே வழங்குகின்றது. எங்ஙனமெனின், *'பொருளால் பிறர்க்கு நன்மை பயக்கும் சொற்களை மனத்தால் ஆராய்ந்து இனிமையுள்ளனவாக ஒருவன் சொல்லுவானாயின், அவனுக்குப் பாவங்கள் தேய அறம் வளரும்.' "தவத்தின் முன் நில்லாதாம் பாவம்". என்றபடி, பாவம் தன்பகையாகிய அறம் வளர்தலினால் தனக்கு நிலையின்றிக் குறையுமன்றோ? நல்லவை நாடிச் சொல்லுமிடத்தும் கடியவாகச்சொல்லின் அறமாகாதென்று அறிஞர் கூறுதலின், அதுவும் இன்சொல்லாகவே யிருக்கவேண்டுமென்க. ஆதலின், †'பொருளினாலே பிறர்க்கு நன்மையைக் கொடுத்து இனிமைப் பண்பினீங்காத சொற்கள், ஒருவனுக்கு இம்மைக்கு நீதியையுமுண்டாக்கி மறுமைக்கு அறத்தையும் பயக்கும்." ‡'பொருளாற் பிறர்க்கு நோய் செய்யாத இனிய சொற்கள் ஒருவனுக்கு வருபிறப்பிலும் இப்பிறப்பிலும் இன்பத்தைக் கொடுக்கும்.' இங்ஙனம் இருமைப் பயன்களும் ஒருங்கு எய்துவிக்கும் இன்சொல்லின் பெருமையை எவரெடுத்தியம்புவர்!

இனி எவர்க்கும் இன்பந்தரும் இனிய சொற்களைவிட்டுக் கடுஞ்சொற்களைப் பேசுதல் பெருங்குற்றமாம். §'பிறர்கூறிய

---

* அல்லவை தேய வறம்பெருகு நல்லவை
நாடி யினிய சொலின்.

† நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று
பண்பிற் றலைப்பிரியாச் சொல்.

‡ சிறுமையு ணீங்கிய வின்சொன் மறுமையு
மிம்மையு மின்பந் தரும்.

§ இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.

இன்சொல் தனக்கு இன்பந் தருதலை அனுபவித்தறிகின்றவன், அது நிற்க வன்சொற்களைப் பிறரிடத்துச் சொல்லுவது என்ன பயன்கருதி?' அது பெரிதும் அறியாமையேயாம். கடுஞ்சொல் பிறர்க்கும் இனிதன்றாகையால் அது கூறலாகாதென்க. *'அறம் பயக்கும் இனிய சொற்களும் தன்னிடத்தே உண்டாயிருக்க, அவற்றைக் கூறாது, பாவம் பயக்கும் கடுஞ்சொற்களை ஒருவன் சொல்லுதல், இனிய கனிகளும் தன் கையினிடத்து உண்டாயிருக்க அவற்றையுண்ணாமல், இனிமை யில்லாத காய்களை உண்பதனோடொக்கும்.' ஔவையுண்ட நெல்விக்கனிபோல அமிழ்தானவற்றைக் கைவிட்டு எட்டிக்காய்போல நஞ்சானவற்றை யுட்கொள்பவன் நன்மையடைவனோ? கடுஞ்சொற் சொல்லுதல் முடிவில் தனக்கே தீமையைத்தருமென்றுணர்க.

இத்துணையுங் கூறிய வாற்றால், அறத்தின் வழியை அறிந்தவர் வாய்ச்சொற்களே இன்சொல் என்பதும், முகமலர்ந்து இனிய சொற்களைச் சொல்லுதல் அகமலர்ந்து கொடுத்தலினும் நல்லது என்பதும், அறம் இன்சொல்லினிடத்ததே யென்பதும், இன்சொல்லை யுடையவர்க்குத் துன்பமில்லை யென்பதும், ஒருவனுக்கு இன்சொல்லே ஆபரணமென்பதும், இன்சொல்லால் பாவம் தேய அறம் வளருமென்பதும், இன்சொற்கள் இம்மை மறுமை யிரண்டினும் இன்பந்தருமென்பதும், கடுஞ்சொற் கூறலாகாதென்பதும், இன்சொல் இருக்க வன்சொற் கூறுதல் கனியிருக்கக் காயைத்தின்றற்போலு மென்பதும், பிறவும் பெறப்பட்டன.

---

## செவ்வாய்.

(வெண்டாமரை ௬, இதழ் ௪, 105-ம் பக்கத் தொடர்ச்சி.)

செவ்வாயில் வாசயோக்கியமான இடங்களுக் கருகாமையில் நீர் இல்லாததால் அதில் மனிதர்கள் இல்லையென்று சிலர் ஆக்ஷேபிக்கக் கூடும். ஆனால் நமது கண்களுக்குக் கோடுகள்போல் காணப்பட்டு, நம

---

* இனிய வுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

மால் கால்வாய்களெனக் கருதப்படுபவைகள் உண்மையில் அக்கால்வாய்களுக் கிடையே இருக்கும் மத்தியப்பிரதேசங்களெனத் தீர்மானிப்பதே அவ்வாக்ஷேபணைக்குச் சமாதானமாகும். தண்ணீர்க் கஷ்டம் இவ்வாறு நீங்கவே, இனிச் செவ்வாய்க் கிரகத்திற்குத் தக்கவாறு அதில் எப்படிப்பட்ட மனிதர்கள் வசிக்கவேண்டும் என்பதை விசாரிப்போம்.

ஜந்துக்களின் பரிமாணம் முக்கியமாய் அவைகள் வசிக்கும் கிரகத்தின் பரிமாணத்திற்குத் தக்கதாகவே இருக்கிறது. ஆகர்ஷணசக்தியும் பருமனுக்கும் பதார்த்தத்தின் அளவுக்கும் தக்கவாறு மாறுகிறது. இவைகளின் பயனோ மிகப்பெரிது. செவ்வாயின் மையக் கவர்ச்சி (Gravity) பூமையக் கவர்ச்சியில் மூன்றிலொருபங்கிற்குக் கொஞ்சம் அதிகமாயிருக்கிறது. இதனால் இரண்டு விஷயங்கள் ஏற்படுகின்றன. நாம் பூமியில்செய்யும் ஒருபங்கு முயற்சியைக்கொண்டு செவ்வாயில் மூன்றத்தனை வேலைசெய்யக்கூடும். ஆகவே நமது வேலைகளெல்லாம் மூன்று பங்கு சுளுவாயிருக்கும். இன்னும் வேறொரு பெருத்த லாபமுமுண்டு. பூமியிலுள்ள சௌகரியங்கள் அங்குமிருந்தால் செவ்வாயிலுள்ளார் இப்பூவுலகோரைவிட மூன்றுபங்கு ஆகிருதியுள்ளவர்களா யிருத்தல் வேண்டும். இந்த விநோதத்தைப்பற்றிக் கொஞ்சம் யோசிப்போம். மிகப் பருமனுள்ள பிராணிகள் சேஷ்டித்தல் கஷ்டமாயிருக்கிறது. ஒருயானை ஒரு ஈயைப்போல் துள்ளித்திரியக்கூடுமா? இந்த விஷயத்தை நன்றாய் அறிந்துகொள்ளவேண்டுமானால், நாம் நிமிர்ந்து நடக்கும்போது நமது உடம்பில் என்ன நேரிடுகிறதென்று அறியவேண்டும். நாம் நிற்க யத்தனித்தால் நமது தேகத்தின் பாரம் நம்மைக் கீழேதள்ள முயலுகின்றது. நமது சரீரம் நீளம் அகலம் கனம் என மூன்று அளவுகள் உள்ளது. நமக்கு நிற்கும் சக்தி இரண்டு அளவைகள் உள்ள தசைநார்ப் பட்டைகளால் ஏற்படுகின்றது, ஆகவே செவ்வாயிலுள்ளான் நம்மைப்போல மூன்றுபங்கு பருமனுள்ளவனா யிருந்தால் அந்த உடம்பைத் தாங்க அவனுக்கு இரண்டத்தனை சக்திதான் இருக்கும். ஆகையால் அவன் வேலை செய்யும்போது நம்மைவிடச் சீக்கிரம் களைத்துப்போவான் என்று நினைக்க இடமுண்டு. ஆனால் அது சரியல்ல. பூமியில் அவன்வந்தால் 27 பங்கு அதிக பளுவாய் இருப்பான். ஆகிலும் செவ்வாயின் மைய சக்தி $\frac{1}{3}$ ஆக இருப்பதால் அவன் அங்கு 9-மடங்குதான் பளுவாயிருப்பான். அவன் தசை நார்களும் 9-பங்கு அதிக அகலமாயிருக்கும். இவ்வாறு அவன் பாரத்திற்கும் அதை வகிக்கும் சக்திக்கும் உள்ள சம்பந்தம் மாறாதிருப்பதால் அவனும் நம்மைப்போல் சுலபமாகவே நிற்கவும் நடக்கவும் கூடும். அவன் தசை நார்களும் 27 பங்கு அதிக சக்தி யுடையனவா

யிருக்குமாதலால் அவன் நம்மினும் 27-பங்கு அதிக வேலை செய்யக் கூடும். அதனோடு செவ்வாயின் மைய சக்தி உண்மையில் சுமார் 2/5-ஆக இருப்பதால் தசை நாரின் பலம் ஏறக்குறைய 50 – பங்கு அதிகமாகும். ஆகையால் செவ்வாயார் நம்மைப்போல் மூன்றத்தனை பருமனும் 50-பங்கு தேகபலமும் உள்ளவர்களாயிருத்தல்வேண்டுமெனத் தோன்றுகின்றது.

சு. சுவாமிநாத தீக்ஷிதர், B. A., L. T.
புதுவை.

---

## குறிஞ்சிப் பாட்டு.

(கதை.)

(தோழி தலைமகள் நிலைமையைத் தாய்க்குக் கூறியது.)

அன்னாய் வாழி! யான் கூறும் இதனைக் கேட்பாயாக. ஒளி வீசும் நெற்றியினையும், படர்ந்த மென் கூந்தலையும், சிறந்து விளங்கிய மேனியையுமுடைய என் தோழி தன் மனத்துள் ஒளித்து நிற்கும் ஆற்றற்கரிய அந்நினைவே அவள் பூண்டிருந்த அணிகளை நெகிழப்பண்ணின. மருந்தில் தீராத அக்கொடுநோய் உனக்கு அறிவித்தல் கூடாமையின், நானும் அதனைக் கரந்தே வைத்தேன். அவளது நல்லழகு கெடவும், மென்றோள் மெலியவும், பிறாறியக் கைவளை நெகிழவும், அவள் தனிமையிற் புலம்பவும் கண்ட நீ, காரணம் அறியாமையின் மருண்டு, இவ்வகன்ற ஊரிடத்துக் கட்டினாலும் கழங்கினாலும் குறியறிவாரைக் கொண்டு வினவினை. அவர் அத்துயர் தெய்வத்தாலாயதென்று அறிவிப்ப, நீயும் பல்வேறு உருக்கொண்ட தெய்வங்களையும் தூபம் சந்தனம் முதலியன கொடுத்து உபசரித்தும், மலர்கள் தூவிப் பணிந்தும், ஒருவாற்றானும் என் தோழியின் துயர் நீங்காததுகண்டு, இந்நோயை யறியாது வருந்தி நின்றாய்! பொன்னாலும், முத்தாலும் மாணிக்கத்தாலும் ஆகிய அணிகள் கெட்டால் அவை பின்னும் வந்து கூடி அணிகள் ஆம். ஆனால் தத்தம் குலத்திற்கு உற்ற குணநலனும், ஒழுக்க மேம்பாடும் சிறிதேனும் பிறழின், அக்குற்றத்தைக் கழுவி முன்னிலைக்குக் கொணர்தல், தொன்னூற்பயிற்சியும், சிறந்த அறிவினையுமுடைய பெரியோர்க்கும் இயலாதது என்பர். "நெடிய தேரினையுடைய என் தந்தையின் காவலைக் கடந்து சென்று என் மனத்துற்ற காதலும் மடனும் ஒருங்குசேர, இருவேம் யாம் இழைத்தனம் கந்தர்வமென்னும் விவாகம் என அன்னைக்கு அறிவிப்பின் நம்மீது பழி ஏது! இம் மணம் மறையால் விதிக்கப் பட்

டதேயன்றோ ? அன்றியும், அத்தலைவர் நம்மைவந்து அடையாது போயினும் மறுபிறப்பிலாயினும் அவரைக் கூடியடையலாம் என்னும் இவ்வொரு எண்ணம் என்னை ஒருவாறு ஆற்றுவிக்கிறது" எனப் பலபடக் கூறி, என் தோழியாம் இவள், ஆற்றற்கரிய நோய் கொண்டாளாய், கலைமானின் அமர்த்த நோக்கினை யொத்த தன் இயற்கையான பார்வையை யிழந்தவளாய்த் தனியிற் புலம்பி வாடி நிற்பள். நானும், தம்முள் மாறுபட்டு நின்ற இருபெருவேந்தரை ஒருப்படுத்த முயலும் ஆன்றோர் போல, அன்னை கடிவளோ என்னும் அச்சத்தினாலும், இவள் துயர் காணும் ஒரு வருத்தத்தானும் பிடிபட்டு வருந்தா நின்றேன். எம் வாழ்க்கை நலமும், இருகுடியின் தகைமையும், எம் குணத்தையும், தம்முள் ஒப்பிட்டுப்பார்த்தும் பிறருடன் கூடிப் பேசியும் இருகுரவரும் அதனை முடிக்காது, இவற்றை யாராயாது யாமேயாகத் துணிந்து ஆக்கிய உயிரளவும் பொறுத்ததாகிய இக் கந்தருவமணம் நடந்த ஆற்றினை நீ அறியும்படி கூறுவேன். சினவாதிருப்பாயாக !

அன்னாய்! "நெல் பொருந்திய மூங்கிலை வளைத்தற்கு யானை எறிந்த துதிக்கைபோல, கதிரின் சுமைதாங்காது தலைவளைந்த முதிர்ந்த தினையில் வீழும் கிளிகளையோட்டிப் பொழுதுபடும் காலத்தில் திரும்புவீராக" என நீ எம்மை விடுக்க யாங்களும்போய், சேணோன்பரண் பக்கலில் இருக்கும் எம் காட்டுப்பிரம்பாற் பின்னப்பட்ட இதணத்தில் ஏறி, தழல், தட்டை, குளிர், கவண்முதலியன கொண்டு புள்ளோப்பி நின்றேமாக, வானிடம் ஆடும் பறவைகள்யாவும் தம்மிருப்பிடம் செல்லும்படி, நிறைந்த கருங்கடல் குறைய முகந்து முரசம்போல இனிது முழங்கி, காற்று வந்தலைப்ப மேகம் மழைபொழிந்தது. யாமும், தலைவனது நெடுமலைச் சிகரத்தினின்றும் இழிதரும் துகில் போன்று வெளுத்த அவ்வழகிய தெண்ணீரருவியில் பெரிதும் விருப்புற்று மனமார விளையாடியும், அந்தச்செறிந்த மலைப்புறத்திருக்கும் பளிங்கைக் கரைத்துச் சொரிந்தாலென்ன அணியுற விளங்கும் சுனையைக் குடைந்தாடியும், சிவந்த கண்ணேமாய், பொன்னிலழுத்தின நீலமணியெனத் திகழும் எம்முதுகிடத்திற் றாழ்ந்துநின்ற பின்னல் பொருந்திய எம் கூந்தலைப் பிழிந்து உலர்த்தி, காந்தள் குவளை ஆம்பல் அனிச்சம் எனப் பிறபூக்களையும் தேடிப்பறித்து, மழைபெய்து கழுவிய அகன்ற கற்பாறையிற் குவித்து, பறவைகள் இயற்றிய பல்லியங்கறங்கினவென்ன ஓசைமிகுத்த மலைப்புனத்தில் கூவி நின்று கிளிகளை ஓட்டியும், அரவெனப் பரந்த அல்குலிற் றழையுடுத்தியும், பன்னிறமாலைகளை எம்முடியில் அழகுபெறச்

சுற்றியும் தீநிறத் தளிரையுடைய அசோகின் தாது கமழும் தண்ணிழலில் சிறிது தங்கினேம்.

யாம் இவ்வாறு இருக்கையில், மிகுத்த சினங்கொண்டு, நெருங்கினோரை வெருளும் மூங்கில் முளைபோன்ற பல்லையும், பெரிய நகங்களையும் உடைய நாய் ஒன்று கூர்த்த நோக்குடன் எம்மை வளைத்து மேல்வந்தது. யாமும் நடுங்கிக் கடிதிற் செல்ல லாற்றாது திகைப்புற்று நிற்க, எண்ணெய் நீவிய குடுமியில் மயிர்ச்சாந்தைப்பூசி ஈரம் புலராக் குடுமியை அவிழ்த்து, அகிற் புகையூட்டியும் நெய்யூட்டியும் வளர்க்கப்பட்ட அவனது மணிநிறக் குஞ்சியின்கண், பன்னிற மலர்களை ஆய்ந்து தொடுத்த ஒரு சிறு பூவடத்தைச் சுற்றியும், பரந்த தோட்புறத்தில் வீழும்படி அழனிறங் கொண்ட அசோகந்தளிரை ஒரு காதிற் செருகியும், சந்தனம் குழைந்த அவனது வலிகொண்ட அகன்ற மார்பிடத்தே பல வணிகளுடனும் நறிய மாலை விளங்கவும், பூணொடு மிளிரும் முன்கையில் வரிவில் ஏந்தியும் அம்பு பிடித்தும் அரிய வேலைப்பாடமைந்த கச்சை கட்டிய துணியை அணியுறக்கட்டியும் பொன்னாலாகிய பூண்களில் அவனிட்டிருந்த வீரக்கழல்கள் பொருந்தி ஒலிசெய்யவும் ஓர் குமரன், வேறு புலத்துப் புகுவதோர் ஆவினைக் கண்ணுற்ற ஏறுபோல, செருக்குடன் வந்து எம் மனக்கலக்கம் தீரலாம்படி மெல்லிய குரலில் இனிய சொற்களையிசைத்து, ஐம்பாலுடன் கூடிய எம் அழகைப் புகழ்ந்து, "ஒள்ளிய தொடியையும், மெல்லிய இயல்பையும், அழகிய ஆழ்ந்த கொப்பூழினையும், மடப்பம் தெரிக்கும் மதர்த்த கண்களையும் உடைய இளையீர்! எம் அம்பிற்பிழைத்து இவ்வழியோடிய சில விலங்குகளையுடையேன் யான்" எனக் கூறினன்.

யாம் அதற்கு மகிழ்ந்து மறுமாற்றங் கொடாதிருப்ப, அவன் சிறிது கலங்கி, "மெல்லியலீர்! இவ்வழிச்சென்ற விலங்குகளைக் காட்டித் தாரீராயினும் எம்மோடு உம்கனிவாய் விண்டு ஒரு மொழி கூறலும் உமக்குப் பழியாமோ?" என வினவி, இன்னிசை வலவன்பயின்றதோர் பாலையாழ் நரம்புபோல இம்மென ஒலித்து நின்ற களி வண்டுகளையும் கருஞ் சுரும்பினங்களையும், மலர்மிக்கதோர் கொம்மை முறித்துத் தாறு கடந்த மதக்களிறெனச் சுழற்றி ஓட்டிக் கல்லெனவொலிக்கும் வேட்டை நாய்களை அடித்து அடக்கி எம்மொழிகளை எதிர்பார்த்து நின்றனன்.

நிற்க, தினைத்தாளால் வேய்ந்த சிறு குரம்பைகளிலிருந்த காவற்காரர் மானேர் விழியினராம் தம்மனைவியர் தேனாற் சமைத்த கள்ளையுண்டு மகிழ்ந்து தம் காவலை மறந்து நிற்ப, புனத்திருந்த யாவற்றையும்

யானை மேய்ந்துசெல்ல, சிறிது மயக்கம் தெளிந்த காவலாளர் கொல்லை பாழடைந்து நின்ற நிலையைக் கண்டு வருந்தி எழு சின அரவு போன்ற வில்லை நாண் ஏற்றிக் கணையெய்து, கானகம் முழுவதும் ஒலிக்கும்படி சீழ்க்கையிட்டுக் களிற்றினைப் புனத்தினின்று விரட்ட, மதம் விட்டு மயங்கி நின்ற ஒரு யானை மரங்களை முறித்துக்கொண்டு காரிடியென முழங்கித் தன் துதிக்கையை நிலத்தில் அறைந்துகொண்டு விசையுடன் கூற்றம்போல எம்மை எதிர்த்து வந்தது. யாமும் பிழைக்க வேறு வழி யறியாது நடுங்கி, உயிரினும் சிறந்த நாணத்தையும் மறந்து இரண்ட வளைகள் ஒலிப்ப விரைந்து அவனைச் சூழ்ந்து தெய்வமேறிய மயில்போல் நடுங்கி நின்றேம். அத்தலைமகனும் நெடிய கோலையும் விரைந்த செல வினையுமுடைய அம்புகளைத் தொடுத்து அந்த யானையின் அணிமுகத்து எய்ய, அம்பு பட்ட புண்களால் அழகழிந்த அவ்வேழமும் முகம் முழு வதும் குருதி பரக்க, அணங்குற்ற மகளிர்க்காக மறியறுக்குங் களத்தில் குருதி குதிப்பதுபோலும் குதிக்க, நாங்கள் பயந்து பிணித்த கரத்தின ராய் நுரையொடும் வந்த யாற்றின் பெருக்கிற் குதித்தோட முயன்று நாங்கள் அக் கான்யாற்று அலைகளில் சரிந்துவீழும் கரையில் நின்ற வாழைபோலக் கலற்றுத் தவித்துநின்றேம்.

இதற்குள், அப்பெருந்தகையாளன் களிற்றினை ஓட்டிவிட்டு எம்மை நோக்கிவந்து என் தோழியைப் பார்த்து, "அழகிய சிலவான மெல்லிய கூந்தலையுடையாய்! நீ தளர்வடைதல் வேண்டா!" எனத் தூக்கி, "யான் நின் அணிநல நுகருங் கருத்துடையேன்; நின்னை நீங்குவன் எனச் சிறிதும் கவலுறவேண்டா" எனக்கூறினன். பின்னும் நம் தோழியின் மாசற்ற ஒளிநுதலைத் துடைத்து இது நெடிது நிகழ்வ தாக என்னுங் கருத்துடன் என்முகநோக்கி நகைத்தான். இங்ஙனம் காமமுற்று மேல்வரும் அக்குமரனைக்கண்டு நாணமும் அச்சமுங்கொண்டு நம் தோழி அவனை விட்டு விலகவும் அவன் விடாது பற்றி அவளைத் தன் ஆகம் அடையத் தழுவி நின்றான். தழுவலும், கறிவளர் சுனையில், பராரை மாவின் தீங்கனி வீழ்ந்ததென அப்பழத்தாலும், தேன் உகுக்கும் பலாப் பழத்தாலும் கூடுசிரம்பி அதினுள்ளிருந்த தேனீயையும் வெளித் தள்ளிக்கொண்டு கீழ்பொழியும் தேனும் ஆகிய கள்ளினை உண்ணீராக் கொண்டு உண்ட மயில் இன்னியங் கறங்கக் கயிறேறி யாடும் களமகள் போல அயர்ந்து நிற்கும் சாரலில், விண்ணிடைப் பூத்த செங்காந்தள் மலர்கள் ஆங்கு ஆடும் வரையரமகளிர் தாளிற்பட்டுச் சிறிதே தன்னல னிழந்து கீழ்வீழ்ந்து பரந்து அழகுசெய்யும் அம்மணிமலைநாடன், நம்

தோழி தன்னகத்தே வரைந்துகொண்டு நெறிப்படியே இல்லறம் நிகழ்த்தலை விரும்பினள் என்பதைக் கண்டனன். காண்டலும், அப்பெருந்தகை, "மெல்லியன் மடந்தாய்! பலரும் பொருந்தி உண்ணுமாறு வாயில் அகல மலர்ந்த எம் வளநகரில் விழாக் கொண்டாலென்ன அகம் பொலிவுறும்படி பசிய நிணமும் நெய்யும் விரவிய சோற்றை நீ இட, பெரியோர் சுற்றத்தார் உண்டு எஞ்சிய அடிசிலை உன்னோடும் உண்டலை நான் விரும்பினவனே! அதுவும் நிகழ்தல் ஒன்றே" எனப் பலவாறு கூறியும், முருகனை வாழ்த்தியும், சபதமிட்டுத் தேற்றியும், தெள்ளிய அருவிநீரை உட்கொண்டும் இவளைத் தேற்றி, தேவர் விரும்பத் தக்க அழகிய பூமலிந்த சோலைகளில் களிறுதரு புணர்ச்சியைப் பெற்று அன்றைப் பொழுதைப் போக்கினன்.

பின்னர், பல் கதிர்ப்பகலோன் எழுபரிகள் பூண்ட தன்தேரை ஏறிப் பகற்பொழுது கழியும்படி தாழ்ந்து அத்தமனகிரியை யடைந்தனன். மான்கணங்கள் மரத்தடிகளிற் றிரண்டு கூடின. பசுக்கள் தம் கன்றுகளைக் கூவியழைத்து மன்றுகளிற் புகுதலாயின. ஓர் அன்றில் தன் வளைந்த வாயினால் பனைமடலின் அகத்திருந்து தன் ஊதுகொம்பு போன்ற குரலுடன் தன் பெடையை யழைத்தது. பாம்புகளும் மணியுமிழ்ந்து இரைதேடலை மேற்கொண்டன. ஆயர் பலர் பலவிடங்களிலுமிருந்து ஆம்பற் குழல்கொண்டு தீங்குரல் எழுப்பினர். ஆம்பல் மலர்கள் தம் இதழ்கள் அவிழ்த்தன. அந்தணர் தமக்குரிய அந்திக் கடன்களைக் கழிக்க விரைந்தனர் ஊரிலுள்ள பூந்தொடி மகளிர் அணியணியாக விளக்கைக் கொளுத்தித் தம் மனையின் முன்புறம் விளக்கமுறச் செய்தனர். சேணோன் ஒருவன் கானகத்து, தன் விண்ணைத் தீண்டும் பரணில் கோல்கொண்டு தீக்கடைந்து நின்றான். கானகம் முழுவதும் விலங்குகளின் ஒலியால் நிரம்பியது. புள்ளினம் தம் குடம்பையினின்று ஆரவாரித்தன. இங்ஙனம் சீற்றங்கொண்ட மன்னனது படைவேகம் போல மாலைப்பொழுது விரைந்து சென்றுகொண்டே இருந்தது.

இன்னணம் மாலைப்பொழுது வந்தடைய அவ் வன்பன் எம்மை நோக்கி, "ஒள்ளிழையீர்! உம் சுற்றத்தார் நாட்டினர் யாரும் அறிய இவளது கரத்தை எமக்குத்தர; நான் கொள்ளும் அந் நன் மணம் பின்னர் நிகழ்த்துவேம்; இடையில் பேரின்பத்தை யளிக்குந்தக்க இக் களவொழுக்கத்தைத் தவிராது வந்தடைவோம்; சின்னாள் இவ்வொழுக்கத்திற்கு இடந்தரவேண்டி வந்ததெனக் கலங்கவேண்டா!" எனத் தெள்ளிய நன்மொழிகளைக்கூறி எம்மை விடாது தாந்துவந்து நம்மூர் வாயிலில் நீருண்ணுந் துறையிலே எம்மைவிட்டுச் சென்றனன்.

அதுமுதல், தண்டாக் காதலோடு நாளும் இரவில் வருதலை மேற்கொண்டனன். காவற்காரர் ஊரை கடுகிக் காத்தாலும், நாய் குரைத்தாலும், நீ துயிலினின்றெழுந்தாலும், நிலவு தோன்றினலும் அவன், நம் மூங்கிலொத்த மென்றேளியின் இன்றுயில் பெருது போவான். நாங்கள். குறிபெயர்ந்தாலும் அவன் சினவான். அவனே இளமை கடந்தவனுமல்லன். தன் செல்வத்தாலுற்ற செருக்கினல் தன் நிலையினின்றும் தவிர்ந்தவனும் அல்லன். அலர் முதலியன மிகுத்து வருத்தும் இவ்வூரில் இக் களவொழுக்கம் நன்றன்று. நாடறிய வரைந்து இல்லறம் நடத்தலே நல்லறமென்று துணிதலின் இவள் மதர்த்த விழிகள் பெருந்துளி வீழ்ந்து சோர்ந்தமலர்போல வனப்பிழந்து கண்ணீருற்றுக் கலங்கா நின்றது. மேலும் அவர் வருகிற மலைப்பக்கம் இவ்வளவு கடியதென்று நினைக்குந்தோறும், வலையிற்பட்ட மயில்போலக் கலங்கும் இவளது கண்ணீர் இவள் மார்பகத்தீத நனைத்து நிற்கும். அத் தலைவரின் மலையகநாடு, இராக்காலத்து, புலிகளும், யாளிகளும், கரடியும், யானையும், கொடுந்தெய்வமும், இரைதேரும் நாகமும், முதலை முதலியனவும், கள்வர் கொன்று குவிக்கும் தூழிலும், வழுக்கு நிலமும், பேயும், பெரும்பாம்பும் ஆகிய இவையாவும் உள்ளதன்றே எனக்கருதி இவள் அழுங்குவள்.

ரா. வாசுதேவ சர்மா,

புதுவை.

---

## புகழேந்தி.

(வெண்டாமரை ௬, இதழ் ௫, 112-ம் பக்கத் தொடர்ச்சி.)

### ஒட்டக்கூத்தனும் புகழேந்தியும் நட்பினராதல்.

புகழேந்தியார் சோழநாட்டை விட்டு நீங்கி எவ்வரசரிடத்தில் போவது என்று யோசிப்பாராயினர். பாண்டியனிடத்தில் போகலாம் என்றலோ அவன், "உம்மை எனது மகளோடு கூட்டி அவளுக்கு உதவியாக இருக்க அனுப்பினேனே, ஏன் திரும்பி வந்தீர்" என்று கேட்பான். அக் கேள்விக்குப் பதிலென்ன உரைப்பதென்று தியங்கினர். "யார் இக்காலத்தில் தமிழை ஆதரிப்பவர்?" எனப் பலரையும் கேட்க, அவர்கள் சந்திரன் சுவர்க்கியைக்குறித்ததும் அவனிடம் போகப் புறப்பட்டார். தமிழைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்த அச்சந்திரன் சுவர்க்கி மள்ளுவநாட்டில் முரணை நகர்க்கு அரசனாய் வீற்றிருந்தான். இவன்

சோழன்கீழ் அடங்கிய ஓர் குறுநில மன்னன். இந்த மன்னனை நமது புகழேந்தியார் போய்க்கண்டார்.

அவன், புகழேந்தியின் பெருமையை முன்னரே கேள்விப்பட்டிருந்தான் ஆதலால், அவர் வந்ததும், உள்ளங்கொள்ளாப் பெருமகிழ்ச்சி அடைந்தவனாய் அவரைவரவேற்று வந்தனோபசாரங்கள் செய்து அவரைத் தனது ஆஸ்தான வித்துவானாக்கினான். புகழேந்தியும் அவனது தயாள குணத்தைப் புகழ்ந்து அவனைப் பிரியச் சம்மதியாது அங்கேயே சிறப்புடன் இருந்தார். இந்தச் சமயத்தில் ஒரு செய்தி நடந்தது. அது தமிழ் மக்கள் என்றும் மறவாது கொண்டாடத் தக்கது. இச்செய்தி நடந்ததன் பயனாகவே தமிழிலக்கியங்களில் ஒன்றாகிய நளவெண்பா தோன்றியது.

அச்செய்தி கீழ்வருமாறு நடந்தது. ஒரு நாள் சந்திரன் சுவர்க்கியின் அவையிலே சம்ஸ்கிருத வித்துவான் ஒருவர் வந்து, மகா பாரதத்தினின்றும் நளனது சரிதத்தை யாவரும் வியக்குமாறு பிரசங்கம் செய்து பற்பல நீதிகளையும் அதன் வழியாகக் கற்பித்தார். அருங்கலை விநோதனாய் வீற்றிருந்த சந்திரன்சுவர்க்கி உள்ளங் குளிர்ந்து அப் பிரசங்கியார்க்குப் பரிசு கொடுத்து அனுப்பிவிட்டான். ஆனால் தமிழை வளர்த்த அவ்வரசனுக்கு அத்தகைய நளனது சரித்திரம் தமிழில் இல்லையே என்ற வருத்தம் மாத்திரம் அதிகமாக இருந்தது. ஆனால் ஒருநாள் திடீரென்று ஓரெண்ணம் உதிக்கவே, புகழேந்தியாரைக் கூப்பிட்டு, "நளனது சரித்திரம் இதுவரைத் தமிழில் இல்லையே? அது தமிழிற்கே ஒரு பெருங்குறைவு அல்லவா? நீங்கள் அதைச் செய்தால் நன்றாக இருக்கும்" என்றான். புகழேந்தியார் மிகவும் ஆனந்தத்தோடு அம்மொழியை ஏற்று விரைவாக நளன் கதையைப் பாடி முடித்தார். அந் நளன் கதையை அரசனது சபையிலேயே அரங்கேற்றினார். அதன் பெருமை தமிழ் நாடெங்கும் பெருகியது. சந்திரன்சுவர்க்கி அகமகிழ்ந்து புகழேந்திப்புலவர்க்குப் பரிசளித்தான் என்று சொல்லவும் வேண்டுமோ?

புகழேந்தியார் நளன்கதை பாடிய விஷயம் குலோத்துங்கச் சோழன் காதிற்கும் எட்டியது. அவன், "என்ன! இத்தகைப்பெரும் புலவரை இத்துணைநாளாகப் பிரிந்திருக்கின்றோமே!" எனவருந்தி, சந்திரன் சுவர்க்கிக்கு, புகழேந்தியாரைத் தன்னிடம் அனுப்பும்படியாக ஓலை விடுத்தான். அதற் குடன்பட்டு அக் குறுநில மன்னன் அனுப்ப, புகழேந்தியார் சோழனை வந்தடைந்தார். சோழன், "புலவர் திலகமே! நான் செய்த குற்றத்தைப் பொறுத்தருள்வது பெரியோராகிய நுமது கடமை, இனி நீங்கள் அன்புடன் எனது சபையை அலங்கரித்து இருக்

கவேண்டுகிறேன்" என்று கேட்க, அதற்குடன்பட்டுப் புகழேந்தியார் அவன் சபையிலேயே இருந்தார்.

தன் சபையிலும் நளவெண்பாவை அரங்கேற்றுதல் பெருமைக் கிடைக்கும் என அறிந்த சோழன் நளன் கதையை அரங்கேற்றும்படி புகழேந்தியை வேண்டிக்கொண்டான். புகழேந்தியாரும் உடன்பட்டார். இத்துணை நாளாகப் புகழேந்தியாரும் ஒட்டக்கூத்தரும் நேராக வாதம் செய்தது கிடையாது. ஆனால் இச் சந்தர்ப்பத்தில் அவ்வண்ணம் வாதம் செய்ய நேர்ந்தது. நளன் கதையிற் பற்பல குற்றங்களை ஒட்டக்கூத்தன் எடுத்துக்காட்ட, அவற்றை எல்லாம் அழகு என நிலைநிறுத்திய புகழேந்தியின் திறமை வியக்கத்தக்கதாயிற்று.

நாள்தோறும் சிற்சிலபாடல்களாக அரசனது சபையில் புகழேந்தியார் பிரசங்கித்து வந்தார். எல்லாப் புலவர்களும் நம் புலவரை வியந்து கொண்டாடினார்கள். ஒட்டக்கூத்தரது வயிறோ பற்றி எரிந்தது. எப்படியாவது புகழேந்தியாரது நூலில் குற்றங் கூறவேண்டும் என்பதே அவனது முன்னோக்கமாக இருந்தது. ஆகவே பற்பல ஆசங்கைகளை எழுப்பி வந்தான். அவைகளுக்கு எல்லாம் நம் புலவர் சமயோசிதமாக விடைபகர்ந்து அவன் வாயை அடக்கிவந்தார். அதனால் ஒட்டக்கூத்தரது இழிதகைமையும் புகழேந்தியாரது பெருந்தகைமையும் மலைவிளக்குப் போல் நன்றாக விளங்கின.

ஒட்டக்கூத்தனது ஆசங்கைகளில் சிலவற்றை இங்குச்சொல்வோம்:

புகழேந்தியார், சுயம்வர காண்டத்தில் 99-ம் செய்யுளாகிய

"மல்லிகையே வெண்சங்கா வண்டே வான் கருப்பு
வில்லி கணைதெரிந்து மெய்காப்ப — முல்லையெனு
மென்மாலை தோளசைய மெல்ல நடந்ததே
புன்மாலை யந்திப் பொழுது."

எனும் பாடலினை எடுத்துப் பலபடப் புனைந்து பிரசங்கித்தார். இப்பாடலில் புலவர் மல்லிகை மலர்களைச் சங்குகளாகவும், வண்டுகளைச் சங்கூதுபவர்களாகவும், மன்மதனை மெய்காப்பாளன் ஆகவும் அந்திப் பொழுதினை அரசனாகவும் உருவகம் செய்துள்ள பெருமையை எல்லாரும் கொண்டாடினார்கள். இதனைக் கண்ட ஒட்டக்கூத்தன் கைகொட்டி நகைத்து, "இதுவும் ஒருபாடலா, பெரும்புலவர் அடிசறுக்கினார், மல்லிகையினைச் சங்காகவும் வண்டினைச் சங்கு ஊதுவார்களாகவும் உருவகம் செய்தது பொருத்தமில்லாதது, சங்கு ஊதுவோர் அடியில் ஊதுவதல்லது மேற்

புறத்தில் ஊதுவதை நாம் கண்டதில்லை, வண்டோ மேற்புறத்தில் ரீங்காரம் செய்கின்றது. இது உலக இயற்கைக்கு விரோதமானபடியால், உலக விருத்தம் எனும் தோஷம் இச்செய்யுளில் இருக்கின்றது" என்று கூறினன். புகழேந்தியார், "குடியனுக்கு மயக்கத்தால் வாயென்றும் மற்றையதென்றும் தெரியாதவாறுபோல மதுமயக்கத்தால் வண்டு மாறி ஊதுவது உலகவிருத்தமல்ல" என்றுகூறிக் கூத்தர் வாயை அடக்கினர்.

பின்பு அதே காண்டத்தில் 104-ம் செய்யுளாகிய

"செப்பிளங் கொங்கைமீர் திங்கட் சுடர்பட்டுக்
கொப்புளங் கொண்ட குளிர்வானை — இப்பொழுது
மீன்பொதிந்து நின்ற விசும்பென்ப தென்கொலோ
தேன்பொதிந்த வாயாற் றெரிந்து."

என்ற பாடலைப் பிரசங்கித்தார். அதில் குற்றம் காட்ட ஒட்டக்கூத்தர் துள்ளி எழுந்து, "ஐயா நீர் நக்ஷத்திரங்கள் நிறைந்து விளங்கும் வானத்தைக் கொப்புளங்கொண்ட தொன்றாக உருவகம் செய்தது சமயோசிதமே, ஆனால் கொப்புளம் இருப்பின் சீழ் வடியுமே; இக்கொப்புளங்களில் நின்றும் சீழ் வடியவில்லையே?" என்று வினவினன். புகழேந்தியார், ஒட்டக்கூத்தன் வாய் பொட்டெனா அடங்க, "நீங்கள் கூறியது உண்மையே, சீழ் வடியா விட்டாலும் சீலத்தண்ணீர் வடிகின்றது. அச்சீலை நீர்தான் பனி என உய்த்துணரவைத்துப் பாடினேம்" என்று விடைபகர்ந்தார். இவ்வாறே மற்றைய ஆக்ஷேபனைகளையும் நீக்கி உயர்ந்த புலவராய் விளங்கினர் புகழேந்தியார்.

இவ்வாறு ஒட்டக்கூத்தன் தனக்கு எதிரியா யிருந்து வருவதைக் கண்ட புகழேந்தியார் மிகவும் மனம்நொந்து, எப்படியாவது அவனை உலகினின்று ஒழித்துவிட வேண்டும் என்று மனத்தைத் திடம்பண்ணிக்கொண்டார். ஒருநாள் இரவில் புகழேந்தியார் ஒரு பெருங்கல்லோடு ஒருவருக்கும் தெரியாதபடி ஒட்டக்கூத்தாது மாளிகைக்குள் போய் அவனது பள்ளியறையில் ஒளித்திருந்தார். அப்போது ஒட்டக்கூத்தன் தனது படுக்கையில் வாடிய முகத்துடன் புரண்டுகொண்டு இருந்தான்: அன்றிரவு அவன் உணவு உட்கொள்ளவேஇல்லை. அதுகண்டு அவனது மனைவியார் பொற் கிண்ணத்தில் பாற் சாதம் கொண்டுவந்து, இரவில் வெறும் வயிற்றோடு தூங்கல் ஆகாது ஆகையால் கொஞ்சம் பாலன்னமாவது உட்கொள்ளும்படி வற்புறுத்தினர். அப்போது ஒட்டக்கூத்தன், "எனக்கு ஒன்றும் வேண்டா, புலவர் பெருமான் புகழேந்தியார் செய்த நளன் கதையில் நாலைந்து பாட்டைப் பிழிந்து கொண்டுவந்தாலும் இப்

போது எனக்குவேண்டா நீபோ" என்றான். உடனே மறைந்திருந்த புகழேந்தியார் வெளிவந்து, ஒட்டக்கூத்தன் தன்னை வெளிக்குமாத்திரம் வெறுத்து உள்ளுக்குள்ளே புகழ்ந்துவந்தான் எனக்கண்டு, அவனைப் போய்த் தழுவிக்கொண்டார். கூத்தன் கல்லையும் புகழேந்தியாரையும் கண்டு விழிக்கவே, நம் புலவர், "உங்களைக் கொல்ல நான் இக்கல்லோடு வந்தேன், ஆனால் நீங்கள் என்னை உண்மையாகப் புகழ்வதாகக் கண்டேன், ஆகையால் நாம் இருவரும் இனி நண்பராக இருக்கலாம்" என்று கூறினார். ஒட்டக்கூத்தனும் சந்தோஷித்து அவரோடு அளவளாவி இருந்தான். புகழேந்தியார் பின்பு வீடு சேர்ந்தார்.

இச் சங்கதியைக் கேட்ட எல்லோரும் சந்தோஷப்பட்டனர். குலோத்துங்கனே தலைகால் தெரியாமல் களிப்படைந்தான். பிறகு ஓர் நாள் சோழன் ஒட்டக்கூத்தனையும் புகழேந்தியாரையும் அழைத்துக் கொண்டு திருநெய்த்தானம் என்னும் சிவ க்ஷேத்திரத்திற்குப் போய்க் கடவுளைத் தொழுதான். திரும்புகையில் புலவர்கள் இருவரையும் நோக்கி, "சிவபெருமானைத் துதித்து நெய்த்தானத்தைப் புகழ்ந்து ஒவ்வொரு பாடல் தனித்தனிப் பாடுங்கள்" என, ஒட்டக்கூத்தன்,

"விக்கா வுக்கா வித்தா விப்போய் விட்டார் நட்டார் சுட்டேர் புக்கார்
இக்கா யத்தா சைப்பா டுற்றே யிற்றே டிப்போய் வைப்பீர் நிற்பீர்
அக்கா டப்பேய் தொக்கா டச்சு ழப்பா டத்தீ வெப்பா டப்பூண்
நெக்கா டக்கா னத்தா டப்போ நெய்த்தா னத்தா னைச்சே வித்தே."

என்ற பாடலைப்பாடினன். புகழேந்தியார்,

"தற்கோ விப்பூ சற்பா சத்தே தட்டா மற்சா கைக்கே நிற்பீர்
முற்கோ விக்கோ விப்பூ சித்தே முட்டா மற்சே வித்தே நிற்பீர்
வற்றா நெட்டோ டைப்பா ரைச்சேர் மைப்பூ கத்தே றித்தா விப்பாய்
நெற்றா றூற்றா லைப்பா கிற்சேர் நெய்த்தா னத்தா னைச்சே வித்தே."

என்ற பாடலை பாடினார். அரசன் மனம் பூரித்தான். 'தற்கோவி' என்ற பாடலைப்பாடி ஒட்டக்கூத்தனைப் புகழேந்தியார் வென்றார்—என்று தொண்டமண்டலச்சதகச்செய்யுள் ஒன்று பறையறைகின்றது அது இது:

"நூலார் கலைவல்ல செம்பியன் கேட்க நொடித்தமிக்க
கோலா கலனொட்டக் கூத்தனை யன்று'தற் கோவி'யென்று
மேலார் கவிசொல்லி நெய்த்தானத் தேசென்று வென்றுகொண்ட
மாலார் களந்தைப் புகழேந்தி யுந்தொண்டை மண்டலமே."

பின்னர் ஒருகாலத்தில் குலோத்துங்கன் திருக்குறுங்குடி என்னும் வைணவத் தலத்திற்குச் சென்றிருந்தான். அங்கும் புலவர்களை, அத்தலத்தைப் புகழ்ந்து பாட வேண்டியபோது,

"திக்குளெட் டெக்கயந் துக்கமுற் றுத்துடெக் கிட்டலற
மைக்கடற் குட்சாந் தைக்கவிட் டோற்கிட மாமதுர
இக்குமுற் றிக்கனுச் சற்றுவிட் டுத்தெறித் திட்டமுத்தைக்
கொக்குமொக் கிக்கக்கி விக்குமச் சோலைக் குறுங்குடியே."

என்று ஒட்டக்கூத்தர் பாட,

"எட்டெழுத் தைக்கருத் திற்குறித் திட்டுநித் தம்பரவும்
சிட்டர்கட் குத்திருப் பொற்பதத் தைச்சிறக் கத்தருமவ்
வட்டநெட் டைப்பணி மெத்தையத் தற்கிடம் வாரிசப்பொ
குட்டினத் தக்குலந் தத்திமுத் தீனுங் குறுங்குடியே."

என்று புகழேந்தியார் பாடினர். சோழன் சந்தோஷித்து இருவர்க்கும் ஒப்பச் சம்மானம் செய்தான் என்ப.

(தொடரும்)

**தென்பட்டினம் - மீனாக்ஷிசுந்தரன்.**

---

## பரமபத சோபானம்.

(வெண்டாமரை ௬, இதழ் ௫, 117-ம் பக்கத் தொடர்ச்சி.)

'தான்' என்னும் அகந்தையற்ற இவ்வான்ம ஸ்வரூபமே அறிந்தோராலும் வேதங்களாலும் பிரதிபாதிக்கப்படும் கூடஸ்தன், சாக்ஷி அல்லது பிரம சைதன்யம் ஆகும். எப்படி ஒரே சூரியன் ஏரிகள், குளங்கள், ஆறுகள், கடல், நீர்க்குடங்கள் முதலிய எல்லாவற்றினுள்ளும் ஏககாலத்தில் பலவாகக் காணப்படுமோ அவ்விதமே ஆன்மா ஒன்றே (அதன் வியாபகத்தன்மையால்) பல ஜீவ கோடிகளின் அந்தக்கரணங்களிலும் 'நான்' 'நான்' என்று விசேஷமாய் ஸ்புரித்து (விளங்கி)க்கொண்டு மற்றெங்கும் ஆகாயத்தில் விளங்கும் கதிரவனொளிபோல் சாமான்யமாய் வியாபித்து நிற்கின்றது. அதிகம் சொல்வானேன்? இவ் வான்மாவை விட்டுச் சகல சராசர பிரபஞ்சங்களுக்கும் யாதொரு இருப்புமில்லை. ஆனால் ஏகதேசத்தில் ஏககாலத்தில் ஆன்மாவில் மித்தையாய் அவைகள் விளங்கிக்கொண்டிருக்கின்றன வாதலால், நாம் அறியக்கூடியனவும் அறியக்கூடாதனவுமாகிய சர்வவிஷயங்களும் ஆன்மாவுக்கு அன்னியமா

யில்லை யென்பது சத்தியத்திலும் சத்தியம். 'தான்' என்னு மிவ்வாத்மா எல்லோராலும் எப்பொழுதும் இங்ஙன மடையப்படும், பரம ஸுகத்திற் கிருப்பிடமாகவும், பரம ஸுகமே யதன்ஸ்வரூபமாகவு மிருந்தும், அதனை மறந்து, 'தன்னை' வெகு தீனனாகவும் துக்கியாகவும் எண்ணி வருந்துவது அஹோ! தௌர்ப்பாக்கியம்!

இதற்குத் திருஷ்டாந்தமாக, தஞ்சைமா நகரில் சில வருடங்கட்கு முன்னர், ஓர் சிறந்த நடிகன் ஓரிரவு பெண் வேடம் பூண்டு மிக்க ஊக்கத்துடன் ஒரு சரித்திரத்தை நடித்துவருகையில், தான் ஒரு புமானென்பதையும், கேவலம் உதர போஷணத்தை முன்னிட்டு நாடகத்தொழிலை மேற்கொண்டவனென்பதையும் மறந்து, தன்னை உண்மையில் ஓர் தீனையாகிய பெண்ணாகவும், துக்கியாகவும் பாவித்து, அச்சரித்திர ஸம்பந்தமாயுள்ள சோகரஸத்தில் மூழ்கி, யாதொன்றும் தோன்றாதவனாய், இனி உயிர் வைத்திருப்பதில் பயனில்லை யென்று துணிந்து, கிணற்றில் விழுந்து மடியும் பாவனையாய் உயரக் கிளம்பிப் பூமியில் வீழ்ந்து ஓர் விநாடியில் மாண்ட விந்தையை நம்மில் பலர் கேள்வியுற்றும், சிலர் பார்த்துமிருக்கக்கூடும். இதில் யதார்த்தமான தன் ஸ்வரூபத்தை மறந்து, தன்னை வேறொன்றாய் மதித்து மயங்கினதாலன்றோ இவ் வனர்த்தம் நேரிட்டது. அங்ஙனமே, எப்பொழுதும் ஸுகஸ்வரூபமாயும், வியாபகமாயும், நாமரூபமனைத்திற்கு மாதாரமாயும், ஸ்வயம் பிரகாசமாயும் நித்யமாயும், சுத்தமாயுமுள்ள நம்மான்ம ஸ்வரூபத்தை மறந்து, நம்மைத் தேகேந்திரியாதி ஸங்காதங்களிலொன்றாய்ப் பாவித்துக்கொண்டு, துக்கியென்றும், கிஞ்சிக்யனென்றும், ரோகி யென்றும், குரூபி யென்றும், அஞ்ஞானி யென்றும், பிறப்பிறப்பாம் ஸம்ஸார சக்கரத்திற் குட்பட்டவர்களாகவும் பாவித்து வருந்துகிறோமே!! மேலும் இந்தத்துக்கமும் பாவனாரூபமே யன்றி யதார்த்தமா? எனெனின், இந்தத் துக்கத்திற்கு ஹேதுவாகிய ஸம்ஸாரம் நம்மிடம் யதார்த்தமாய் ஒருபொழுதுமில்லையாதலால், அதினின் றுண்டாவதாகக் கூறும் துக்கமும் ஸ்வப்ன ஸர்ப்ப பயம்போல் மித்தையன்றோ? இங்ஙனம், பரமானந்த, நிரதிசய, சாச்வத ஸுகஸ்வரூபமே நமதாத்மாவாயிருக்க, அனுவச்யமாய், நம்மிடம் சிறிதுமில்லாததாயும், வேண்டப்படாததாயுமுள்ள மஹத்தான துக்கத்தை நாமே வீணில் ஆரோபித்துக்கொண்டு வருந்தவானேன்? இதுவே மாயை! பரமஸுகத்திற்கு இருப்பிடமாயும், அச்சுகமே யதன் ஸ்வரூபமாயுமுள்ள நம்மான்மாவை மறந்ததே பரம அனர்த்தத்திற்கும் காரணம். மஹத்தான துக்கமே யதன்பயன். இவ்வுண்மையை யதார்த்தமா யறிதலே, மாயையைக் கடத்தல். பரம சுகமே யதன் அவதி.

இவ்வாற்ருல் பெறப்படுவது யாதெனில், சுகத்தை விரும்பும் நாம் அச்சுகத்திற் கிருப்பிடமாயும், சுகமே ஸ்வரூபமாயுமுள்ள ஆன்மாவை அனுபவிகளான மஹான்களிடம், நிஷ்களங்கமான புத்தி பூர்வமாய் விசாரித்தறிந்தாலன்றி, ஆயுள் முழுதும் துறவு பூண்டாலும், காயக் கிலேசம் செய்தாலும், ஸ்நான, விரத, ஹோமாதி கர்மங்களை யனுஷ்டித்தாலும், வேறு எவ்வளவு ஏராளமான விஷய போக ஸாமக்கிரியைகளைச் சேகரித்தாலும், அல்லது, தற்கால நாகரிகத்தை யனுஸரித்த மேன்மையான யந்திர ஸாதனங்களைக் கண்டுபிடித்துக் கையாண்டாலும் சுகமென்பது ஒரு திவலையேனு முண்டாகாதென்பது திண்ணம். ஸுகம் சுகத்தினின்றே யடையப்படும். துக்கத்தினின்று சுகம் லேசமுமடையப் படமாட்டாது. ஆனல், துக்கமே துக்கத்தினின் றடையப்படும். ஆன்மா ஒன்றே ஸுகஸ்வரூபம். அதுவே ஸுகத்தைக் கொடுக்க வல்லது. மற்றச் சராசர பிரபஞ்சங்களும், அதனுள்ள விஷயங்களும் அன்ருத ஜட துக்க ரூபமாயுள்ளது. அதனையாச்ரயித்தால் துக்கமே முடிவு. இவ்வுண்மையை மறைத்து மயக்கி நம்மெல்லோரையும் அல்லலில் படுத்துவது அவித்தை (அறியாமை) என்னும் மாயக் கள்ளியே. அவளை வெல்வது ஒரு பெரிதல்ல. மஹா துக்க பரிதமான இம் மாய வாழ்க்கையில் எவ்வளவுகாலம் நாம் ஸத்ய புத்தி வகித்து விஷயங்களினின்றும் சுகமடைய விரும்புகின்ருேமோ அவ்வளவு காலம் அவள் வலையில் சிக்கினோம். அதன் மித்யா தன்மையையும், துக்க மிகுதியையும் கண்டு, விஷயத்தில் என்று வாஸ்தவத்தில் மலத்தைப்போல் வெறுப்புண்டாய், யதார்த்த சுகத்தை நாடுகிருேமோ, அன்றே, அவள் நம் வசப்பட்டாள். அவளை அடிமைகொண்டே நாம் காரியசித்தி பெறலாம்.

(தொடரும்.)

**M. V. சுப்ரமண்ய ஐயர்,**
Pakala.

---

## ஸ்ரீமத் மத்வாசாரிய சுவாமிகள் சரிதம்.

(கதாவருஷிணி.)

சத்தியமே யுலகினுக்குத் தாயகமாஞ் சமயமெனச் சார்பொன் றின்றி
நித்தியமாய்ச் சமரசமாய் நினைப்போர்க்கு நலம்பயக்கு நெறியாய் நிற்கு
முத்தமமாங் கொள்கைதனை யுலகதனி னிலைபெறவே யுரைத்த தெய்வ
மத்வமத வாசிரியர் திருவடிகளை மனத்திருத்தி வணங்கி வாழ்வாம்.

ஸ்ரீமத் அகண்டாகார சச்சிதானந்தப் பிழம்பாய் விளங்கும் பரம்பொருள் பல்வேறு திருமேனிகொண்டு பல சமயங்களிலுமுள்ள அடியார் பலரையும் ஈடேறச்செய்வதாக நம் முதநூல்கள் முறையிடுகின்றனவாயினும், அவற்றுள் பேதமின்றிப் பொதுநோக்க முடையதாக உள்ள ஒருமதத்தை ஸ்தாபித்தவர் ஸ்ரீ மத்வாசாரிய சுவாமிகளாவார். வாயுவின் அவதாரமென நம்மனோரால் கொண்டாடப்பெறும் இப்பெரியார் சுமார் 750 வருடங்கட்கு முன்னர் உடுப்பிக்ஷேத்திரத்திற்கு அருகிலுள்ள பஜக க்ஷேத்திரம் என்னும் கிராமத்தில் வதிந்துவந்த மத்யகேஹர் வேதவதி என்னும் உத்தம தம்பதிகளின் தவப்பயனாக உற்பவித்தனர். இறைவன் றிருவருளால் அதியற்புதத் திருவிளையாடல் புரியத்தோன்றிய குழவியை மிகப் பாராட்டிப் போற்றி வளர்ப்பாராயினர். இளமையிலேயே நம் சுவாமிகள் செய்த அற்புதங்களைக் கண்டு மகிழாதாரில்லை. இவர் பள்ளியில் பயின்றுவருங்கால் உடன்பயிலும் மாணவனொருவன் தீராத் தலைவலியால் ஒருவாறும் நிவர்த்திக்கப்பெறாது வருந்துவதைக்கண்டு தமது வாயால் ஊதி ஆச்சரியப்படத்தக்க விதமாகத் தீர்த்ததுமன்றி, ஒரு சமயம் மத்யகேஹரை (இவர் தகப்பனாரை)க் கடன்காரன் வழிமறித்துத் தொந்தரை செய்ததைக் கண்டு அருகிலிருந்த புளியங்கொட்டைகளை வாரி அவன் கையில் போட அவை அவனுக்குச் சேரவேண்டிய தொகையளவு பொன்னாக மாறிவிட்டது. சிறு குழவியா யிருக்குங்கால் பல சமயங்களில் காணமற்போய் அதியற்புதமாகப் பின்னர்த் தோற்றப்பட்டதால் இவரை ஒரு தெய்வீகக் குழந்தையென்றே எல்லோரும் மதித்து அன்பு செலுத்துவாராயினர்.

இவர் தமக்குக் கல்வி பயிற்றுவித்த குருவிற்கும் ஒரு சமயம் ஐதிரேய உபநிஷத்தின் ரகசியத்தை உபதேசித்துப் பக்தியின் சிறப்பை விளக்கினர். உபநயனமானபின்பு, உடுப்பியிலுள்ள அச்யுதப்ரேக்ஷர் என்ற ஓர் ஆசிரியரை யடைந்து அரிய ரகசியப்பொருள்களை ஆராயத் தொடங்கியதில் துறவறமே மேலானதென உணர்ந்து சந்நியாசக்கோலங் கொள்ளத் துணிந்தனர். அதையறிந்த இவர் தகப்பனார் (மத்யகேஹர்) மறுக்க, தமக்குச் சகோதரன் உற்பத்தியாகுமளவும் பொறுத்திருப்பதாக வாக்களித்து மறுசகோதரன் உதித்ததும், தமது தாயாருக்கு வேண்டிய ஆறுதல் கூறி விடைபெற்றுக் குருவிடம் சென்று சந்நியாசக்கோலம் தாங்கி, "பூர்ணபிரஞ்ஞர்" என்னும் திருநாமம்பூண்டு, தீர்த்தயாத்திரை புரிவாராயினர். வழியில் விஷ்ணுமங்கலம் என்னும் கிராமத்தில் வீமனைப்போல் பேருண்டி யுட்கொள்ளல், குறைந்த வஸ்துக்களை அதிகமாக்கல் முதலிய அற்புத சக்திகளைப் பிறர் அறியக் காண்பித்ததுமன்றி,

அநேகரோடு வாதஞ்செய்து வெற்றிபெற்று, திருவனந்தபுரம் அணுகி அவ்விடம் விஜயம் செய்திருந்த சிருங்கேரி வித்தியா சங்கரரைச் சந்தித்து இருவரும் நீண்டநாள் அரசன் சமுகத்தில் வாதுபுரிய ஒருவரும் ஜயம் பெறாததால் நம் சுவாமிகள் உடுப்பிக்குத் திரும்பினர். உடுப்பி வந்து தாம் கொண்டிருக்கும் துவைத சித்தாந்தத்திற் கிசைய, பகவத் கீதைக்கு ஒரு வியாக்கியானம் செய்தனர். பின்னர் நேரே ஹரித்துவாரம்போய், அங்கிருந்து பதரிகாச்ரமம்சென்று, ஆண்டு ஓரிடத்தில் தமது சிஷ்யர்களை நிறுத்திவிட்டு, பாறை பாறையாகத் தாண்டி மிக்க சிரமத்துடன் வேதவியாசர் ஆசிரமம் அடைந்து, அங்கு அவரிடம் உபதேசம் பெற்று, பிரஹ்ம ஸூத்திரத்திற்கு வியாக்கியானம் செய்தனர். பின் வங்காளதேசம்போய், அங்கே தமது மதத்தை ஸ்தாபித்து, ஜகந்நாதம் சேர்ந்தார். அவ்விடத்தில் சோபன்னபட்டர், சாமி சாஸ்திரி என்னும் இருவர்கள் இவரிடம் தர்க்கஞ்செய்து முறையே சிஷ்யராயினர். இவர்களில் சாமிசாஸ்திரி என்பார் சந்நியாசம்பெற்று நரகரிதீர்த்தர் என்னும் திருநாமம் பெற்றனர். இவரால்தான் தெலுங்குநாடு முற்றும் மத்வமதம் பரவியது. பின்பு கலிங்கதேசத்தில் அரசன் சிறுவனாக விருந்தபடியால், அரசாங்க காரியங்களை உடனிருந்து கவனிக்கும் வண்ணம் நரகரி தீர்த்தரை விடுத்து உடுப்பிவந்துசேர்ந்து தமது ஆசாரியரான அச்யுதப்ரேக்ஷரிடத்தில் வியாசரிடம் தாம் கேட்ட அற்புத விஷயத்தைக்கூறி, தாம் எழுதிய ஸூத்ர பாஷ்யத்தையும் அவருக்குக்காண்பித்து, தமது சித்தாந்தத்திற்கு இசைய வேண்டினர். அதன்படி அவரும் இசைந்து துவைத சித்தாந்தத்தை அனுசரிக்கலாயினர். இக் கொள்கையைப் பின்பற்றுவோர் அனைவரும் விஷ்ணுவின் ஆயுத முத்திரைகளைத் தமது தேகத்தில் அணிந்துகொள்ள வேண்டுமென ஓர் நிபந்தனை செய்தார்.

ஒருநாள் நமது சுவாமிகள் சமுத்திர ஸ்நானம் செய்துவிட்டுக் கரையோரமாக இருந்து பகவத்தியானம்செய்துகொண்டிருக்கும்போது ஓர் கப்பல் அலையின் வேகத்தால் தத்தளித்துக் கவிழ்ந்துவிடும்போல் இருப்பதைக்கண்டு தமது சிறு வஸ்திரத்தால் அக்கப்பலை அழைப்பது போல் சமிக்கைசெய்ய, கப்பல் யாதொரு அபாயமின்றிக் கரைசேர்ந்தது. அதிலிருந்த கப்பற்றலைவன் சுவாமிகளிடம் அணுகி அநேக பரிசுகள் கொடுத்து ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டியும் அதற்கு உடன்படாது சில கோபிச்சந்தனக் கட்டிகள் மட்டும் பெற்றுக்கொண்டு அதில் பெரிதாக விருந்த ஒன்றை உடைத்துப் பார்க்க, கையில் மத்துத் தாங்கி நிற்பது போன்ற கிருஷ்ண விக்ரகம் ஒன்று இருந்தது. அதைக் கண்டு மத்வர் பக்தி பரவசமாய்க் கிருஷ்ணன்பேரில் துவாதச ஸ்தோத்திரம் என்னும்

கிரந்தமும் இயற்றியருளினர். பின் உடுப்பியில் ஒரு ஆலயம் ஏற்படுத்தி அதில் அவ்விக்ரகத்தைப் பிரதிஷ்டைசெய்து அதற்குப் பூஜை முதலியவைகள் குறைவிலாது நடைபெறுதற்காக எட்டு மடங்களை ஏற்படுத்தி, பூஜை முறைகளையும் ஏற்படுத்தினர். அடுத்த முறையும் பதரிகாச்ரமம் போகப் புறப்பட்டு வழியில் மகம்மதிய அரசர்களுடன் அவர்கள் பாஷையில் பேசி அவர்களைத் திருப்தி செய்வித்து வியாசரிடத்திற்குச் சென்றார். அவரிடத்தில் எட்டுச் சாளக்கிராமங்களைப் பெற்றுக்கொண்டு, "மகா பாரத தாத்பர்ய நிர்ணயம்" என்று ஓர் நூல் இயற்றவும் அநுமதி பெற்றுக்கொண்டு, த்வைதமத சித்தாந்தத்தையும் நிலைநிறுத்திக்கொண்டு உடுப்பி வந்துசேர்ந்தார்.

மத்வர் தமது மதத்தைப் பரவச்செய்து ஜயம்பெற்று வருவதையும், தமக்கு முன்னிருந்த வித்யாசங்கருடன் திருவனந்தபுரத்தில் அரசனெதிரில் வாதுபுரிந்தாரென்பதையும் அப்போது சிருங்கேரியில் இருந்த பத்மதீர்த்தர் என்பார் அறிந்து அம்மதம் பரவாவண்ணம் மத்வ மதத்தைப் பற்றிக் குற்றங்கூறச் சில பிரசங்கிகளையும் ஏற்படுத்தி எங்கும் சென்று பிரசங்கிக்க ஏற்பாடு செய்ததுமன்றி மத்வரது மத விஷயமான அரிய கிரந்தங்களையும் தந்திரமாகக் கவர்ந்துகொள்ளவும் ஏற்பாடுசெய்தார். புஸ்தகங்கள் காணமற்போனதை யறிந்து மத்வர் அருகிலிருந்த ஜயசிம்மன் என்னும் அரசன் உதவியால் அவைகளைப் பெற்றுக்கொண்டு விஷ்ணுமங்கலம் என்னுங் கிராமத்தில் உபந்நியாசம் புரியச்சென்றனர். அவ்விடம் உபந்நியாசம் புரிகையில் திருவிக்கிரமர் என்ற ஓர் பெரிய பண்டிதர் இவருக்குச் சிஷ்யரானர். அவரால் மத சித்தாந்தங்கள் மிகவும் பரவ அதைப் பலரும் அங்கீகரித்தனர். இவரது வேண்டுகோட்கிணங்கி மத்வர் பிரஹ்ம ஸூத்திரத்திற்கு ஓர் விஸ்தாரமான வியாக்கியானம் செய்தனர். திருவிக்கிரமரது பிள்ளையாகிய நாராயணசாரியார் என்பவர் பின்னர் மத்வரது சரித்திரத்தை 'மத்வவிஜயம்' என்ற காவியமாகச் செய்தார். ஸ்ரீ மத்வரது தந்தையும் தாயும் ஒருவர்பின் ஒருவராக இறைவன் திருவடி நிழலை யடைய இவரது சகோதரர் பெற்றோர்கட்குச் செய்யவேண்டிய ஈமக்கடன்களை முடித்துவிட்டுத் தமது சகோதரரிடத்திலேயே சந்நியாசம் பெற்றுக்கொண்டு உடுப்பியிலுள்ள எட்டு மடங்களில் ஒருமடத்திற்குத் தலைவராக இருந்துகொண்டு சந்நியாச ஆசிரமத்தை எல்லோருக்கும் அனுஷ்டித்துக் காட்டினர். கலிங்க தேசத்திலிருந்த நரகரி தீர்த்தர் வெகுகாலம் சென்றபின் அரசாங்கத்தை அரசனிடம் ஒப்புவித்து விட்டு அவனிடமிருந்த ஸ்ரீராம சீதா விக்ரகங்களைப் பரிசாகப் பெற்றுக்கொண்டு உடுப்பி வந்து மத்வர்பால் அளிக்க அதை

அவர் தமது பூஜையில் சிறிதுகாலம் வைத்துப் பூஜித்து வந்தார். பின்னர் 79-வது வயதில் பூஜை முடிந்தவுடன் தமது சிஷ்யர்கட்கு ஐதிரேய உபநிஷத்தை உபதேசம் செய்துகொண்டிருக்கையிலேயே தமது ஐம்புலனும் ஒடுங்க மத்வர் இறைவனது பாதாரவிந்த நிழலையடைந்தனர். சுபம்.

தி. வடிவேலு முதலியார்.

---

## பலசரக்குக் கடை.

---

### புதுவையின் தற்கால நிலைமை.

புதுவையில் மழைக்காலம் வெய்யிற்காலமாக மாறி மாந்தரை வருத்துகின்றது. முன்னொருமுறை தோன்றி மரணமில்லாமல் இடர் விளைத்துப்போன இன்புளுயென்சா என்ற சுரம் இப்போது தோன்றிப் பலர்க்கு மரணம் விளைக்கின்றது. ஐரோப்பியர் சிலரும் இறந்தனர். வைத்தியர்கள் பலரும் இச்சுரத்தால் வருந்துகின்றனர். இது காரணமாகக் கவர்ன்மெண்ட் பாடசாலைகளும் சில நாட்களுக்கு மூடப்பட்டன. இந்நோய் கண்டவர்களுள் சிலர் மருந்தில்லாமலே குணமடைகின்றனர். சிலர் எம்மருந்தினும் குணமடையாமல் எமனுல செய்துகின்றனர். என்னே இந்நோயின் கொடுமை!

அரிசி முதலிய உணவுப் பொருள்களின் விலையேற்றத்தால் ஆங்காங்குக் கொள்ளைகள் நடப்பதுகண்டு, இவ்வூரில் அத்தகைய தீங்குகள் எதுவும் நேராவண்ணம், கவர்ன்மெண்டாரும் முனிசிப்பாலிடியாரும், சில பிரபல வியாபாரிகள், செல்வவந்தர்களுடைய உதவியையும்பெற்று, அரிசி வருவித்து, நேரும் கட்டத்தைப் பொருட்படுத்தாமல், ரூபா 1-க்கு 8-படிவீதம் (பட்டணம் படி 4) ஏழைச் சனங்களுக்கு விற்றுவருகிறார்கள். மற்றவர்கள்போலன்றி இவ்வூரில் இவர்கள் முன்சாக்கிரதையாக மேற்கொண்டசெய்கை மெச்சத் தகுந்ததே.

நமது பத்திரிகையில் குறிப்பித்தபடி, இக்காலத்தில் புதுவையில் நாடகங்களை நிறுத்தினதும் ஏழைச்சனங்களிடத்து அவர்கட்குள்ள இரக்கத்தைக் காட்டுகின்றது.

*_*

### காலஞ்சென்ற பொன்னு-முருகேசப்பிள்ளையவர்கள்.

புதுவையில் "சோஸியெத்தே ப்ரோக்ரேஸிஸ்த்" என்னும் பெரிய சபையில் நீண்டநாளாகப் பொதுக்காரியதரிசியா யிருந்து அதன் முன்னேற்றத்தில் பெரிதும் உழைத்துவந்தவரும், பொது நன்மைக்குரிய செயல்கள் எவற்றினும் பெரிதும் ஊக்கமுடையவரும், புதுவை

வேதபுரீசுரர்கோயில் பெருமாள்கோயில் தருமகருத்தரும், நமது நண்பருமாகிய ஸ்ரீமான் பொன்னு-முருகேசப்பிள்ளை யவர்கள் தேகவியோகம் அடைந்ததுபற்றியும், பிராஞ்சு தேசத்திற்குச் சென்று படித்து இஞ்சினீர் பரீட்சையில் தேர்ச்சி பெற்று, நமக்கெல்லாம் பெருமையை உண்டு பண்ண, பிராஞ்சுப்படையோடு சேர்ந்து பகைவர்களாகிய ஜெர்மனியர்களோடு சண்டைசெய்துவரும் தமது மூத்த குமாரர் இப்போது வர, அவரைப் பார்த்துக் களிப்படையாமற் போனதுபற்றியும் மனம் பெரிதும் வருந்துகின்றது. அவர்கள் குடும்பத்தார்க்கு நமது அனுதாபத்தைத் தெரிவிப்பதுமன்றி, அவர்கட்கு ஆறுதலளிக்கக் கடவுளையும் வேண்டுகின்றோம்.

*
* *

### புதிய சுரம்.

இச்சுரம் எங்கும் பரவிப் பலரை இரையாக்கி வருகின்றது. இது இல்லாத இடம் இல்லையென்றே சொல்லவேண்டும். குக்கிராமங்களில் சேதம் அதிகமில்லை. பட்டணங்களிலேயே மரணம் மிகுதியாக ஏற்படுகின்றது. காரணம் தெரியவில்லை. வேப்பிலை, மிளகு, சுக்கு இம்மூன்றும் சேர்த்துச் செய்யப்பட்ட கஷாயம் பருகுவதைவிட இதற்கு வேறுமருந்தில்லையென்று சின்னாண்முன்னர்ச் சொல்லப்பட்டது. வேறு மருந்து நுகர்ந்தால் நோய் அதிகப்படுகிறதென்றும் சொன்னார்கள். இந்த நோய் கண்டவுடன் சுத்தமான காற்றை ஏராளமாகச் சுவாசிப்பதும், தகுந்த வைத்தியரிடம் காண்பித்துச் சிகிச்சை செய்துகொள்வதும் அவசியமென்று டாக்டர்கள் இப்போது சொல்லுகிறார்களாம். வேப்பம் பூக் கஷாயத்தை அடிக்கடி பருகுவதால் சுரம் தணிந்துவிடுகிறதென்று தங்கள் அனுபவத்திற் கண்ட சிலர் சொல்லுகிறார்கள். எதைத்தான் பின்பற்றுவது? யார்க்கும் எதுவும் உறுதியாகத் தெரியவில்லை. இப் பாழுஞ் சுரம் என்று ஒழியுமோ!

*
* *

### துணிப் பஞ்ச நிவர்த்தி வேலை.

இந்தியா கவர்ன்மெண்டார் தற்காலத்தி லேற்பட்டுள்ள துணிப் பஞ்சத்தை நிவர்த்திசெய்ய இந்தியாவிலுள்ள மில்லுகளில் ஏழைகளுக்கு வேண்டிய துணிகளை அதிகமாக நெய்யவும், அவற்றை லைசென்ஸ் பெற்ற வியாபாரிகள் ஏழைகளுக்குக் குறைந்த விலைக்கு விற்கவும் ஏற்பாடு செய்துவருகின்றனரென்று தெரிகின்றது.

*
* *

### இந்தியாவில் சிறிய கப்பல்கள்.

இந்தியக் கடற்கரைகளில் உபயோகப் படுவதற்காக இந்தியா கவர்ன்மெண்டின் உத்தரவுக்கிணங்கி 6 சிறிய கப்பல்கள் கட்டப்பட்டு

வருகின்றன. அவற்றிற்குரிய சாமான்கள் பலவும் இந்தியாவிலேயே சேகரிக்கப்பட்டவை. இஞ்சினும் பாய்லருமே வெளிநாடுகளி லிருந்து தருவிக்கப்பட்டவை. இந்தியரைக்கொண்டே அவை கட்டப்படுகின்றன. ஒவ்வொன்றும் 125-அடி நீளமும் 23-அடி அகலமும் உள்ளன. சுமார் ஒவ்வொன்றும் 540-டன் எடையுள்ளது. மணிக்கு 10-மைல் போகும்.

*
* *

### பார்சல் சார்ஜ் விகிதங்கள்.

அடுத்த நவம்பர்மாதம் முதல்தேதியிலிருந்து தபால் பார்சல் விகிதங்கள் உயர்த்தப்பட்டிருக்கின்றன. இரண்டணுவுக்கு 40-தோலா எடையிருந்தது. இனி 20-தோலாவாகக் குறைக்கப்படும்.

*
* *

### இன்புளுவேன்சா என்னும் புதியசுரத்திற்குத் தக்க மருந்து.

(தேசபக்தன்.)

ஒவ்வொருவரும் கவனித்தல் அவசியம்.

சாத்தூர் சானிடெரி இன்ஸ்பெக்டர் டி. எஸ். இராமசுவாமி அய்யங்கார் நமக்குப் பின்வருமாறு எழுதுகிறார்.

இன்புளுவென்சா சுரம் மறுபடியும் இந்தியாவெங்கும் பரவிவருகிறது. அநேகர் அதனால் இறந்தும்போகின்றனர். எவ்வளவோ ஆங்கில மருந்துகள் கொடுக்கலாமென்று சொன்னாலும் ஒன்றாவது பலிக்கிறதில்லை. நான் கீழ்க்கண்ட மருந்தை உபயோகித்தேன். அம் மருந்து எல்லாக் கடைகளிலும் கிடைக்கும். விலையும் மலிவு. அதை உபயோகித்தால் நல்ல பலனிருப்பதாக அநேக கேஸ்களில் கண்டேன். அது சுரவேகத்தையும் பின்னால் வரும் இருமலையும் உடனே நிறுத்துகிறது. இம்மருந்தை உட்கொண்ட பின்னர் நோயாளி தன்னுடைய நித்திய வேலைகளைச் சிரமமின்றிச் செய்யக்கூடும்.

ஆறுவேளை மருந்துக்கு 6-பைகூடச் செலவில்லாத இம்மருந்தை ஜனங்கள் உபயோகப்படுத்திப் பார்ப்பார்களென்று நம்புகிறேன்.

### மருந்து செய்யும் விதம்.

அரை அவுன்சு கழஞ்சிக்காய் (கெச்சைக்காய்) ப்பருப்பையும் அதே அளவு கருப்புமிளகையும் வைத்து நன்றாய்ப் பொடிசெய்துகொள்ளவேண்டும். இந்தத் தூளில் ஒருவேளைக்கு அரை அவுன்சாக நாள் ஒன்றுக்கு, காலை, மத்தியானம், மாலை இம்மூன்று வேளையும் சாப்பாட்டுக்கு முன் சாப்பிட்டுவிடவேண்டும். மருந்து மூன்று நாள்தான் சாப்பிடவேண்டும்; அதற்குமேல் கூடாது. இத்தூளை வாயிற்போட்டுக்கொண்டு கொஞ்சம் வெந்நீரையும் உட்கொண்டு வரவேண்டும்.

நான் இதேமருந்தை அநேகருக்குக் கொடுத்துக் குணமடைந்திருப்பதால் அனைவருக்கும் இதை வெளியிடலானேன்.

பல கண்காட்சிகளில்
மெடல்கள்பெற்ற அபூர்வ ஔஷதங்கள்.

---

## பி. சுப்பராய், ஆயுர்வேத
## ஔஷதசாலை,

**ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் கோயில் சன்னிதி, தஞ்சாவூர்.**

தயவுசெய்து
இதைத் தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்.

---

## பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

உரைந்த வாசனை பிள்ளைகள்:—உரைந்த குலாப், உரைந்த மோதியா, உரைந்த லவண்டர்களாகிய 3 தினுசுகள் உடுப்புகளுக்கு போடக்கூடிய உசிதமான வாசனை. தினுசுக்கு டப்பா 1-க்கு அணா 8. வி. பி. சிலவு 1 முதல் 6 டப்பாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

கேசர் பவுடர்:—இது ஓர் விதமான விலைபெற்ற சுகந்த கலவை. இதில் கொஞ்சமெடுத்து தண்ணீரில் கலந்தாவது அல்லது கொஞ்சம் சந்தனத்திற்கலந்தாவது தேகத்தில் பூசினால் எல்லாராலும் புகழத்தக்க பரிமளத்தை தரும். கலியாணம் முதலிய சுபகாரியங்களுக்கு இவை அவசியம் உபயோகிக்கவேண்டியது. அதன் இன்பமான சுகந்தம் அனுபோகித்தவர்களுக்குத்தான் தெரியும். சந்தனத்துடன் மனோரம்மியமான இச்சிரேஷ்டமான கலவையைச் சேர்த்துக்கொண்டால் சந்தனத்தில் அத்தர், பன்னீர், குங்குமப்பூ, முதலிய வாசனைகள் சேர்க்கவேண்டியதனாவசியம். சீசா 1-க்கு விலை அணா 8, ஒன்று முதல் 6 சீசாக்கள் வரையில் அனுப்ப வி. பி. முதலிய சிலவுகள் அணா 5 பிரத்தியேகம்.

அரகஜா:—இது மற்றொரு விதமான திவ்யமான சுகந்த கலவை. இதைத் தனியாகவாவது, சந்தனத்துடனாவது, உபயோகிக்கலாம். தேகத்தில் பூசிக்கொள்ளலாம். உடுப்புகளுக்

குப் போடலாம். அதி உன்னதமான வாசனை. இதன் திவ்யமான பரிமளத்தை சுகித்தரித்தவர்களால் மிகவும் புகழப்படுகிறது. ஒரு தடவை பூசினபிறகு பிரதிதினம் ஸ்நாநம் செய்தாலும் 3 நாள் பரியந்தம் இதன் இன்பமான பரிமளம் தேகத்தில் தங்கி நிற்கும். விலை டப்பா 1-க்கு அணா 8. ஒன்று முதல் 12 டப்பாக்கள் வரையில் அனுப்ப வி. பி. முதலிய சிலவுகள் அணா 5 பிரத்தியேகம்.

இந்தியன் பெட்டல் டஸ்டு:—அதிமனோரம்மியமான சுகந்த கலவைப் பொட்டலம். உடுப்பு பெட்டிகளில் வைத்திருந்தால் உடைகளுக்கு மிகவும் உன்னதமான சுவாசனை ஏற்றுவதுமன்னியில், வண்டு முதலிய பூச்சிகள் துணிகளில் அணுகாமல் காக்கும். இதன் இன்பமான சுகந்தம் நெடுநாள் நிற்கும். பொட்டலம் 1-க்கு விலை அணா 4. ஒன்று முதல் 12 பொட்டலங்கள் வரையில் அனுப்ப வி. பி. சிலவு அணா 5 பிரத்தியேகம்.

தஞ்சாவூர் மசாலா பவுடர்:— ஸ்தாவர வர்க்கத்தைச் சேர்ந்த வாசனை வஸ்துக்களைக்கொண்டு செய்யப்பட்ட மனோரம்மியமான கலவைபவுடர். சைவாளும் மாம்ஸதாரிகளும் குழம்பு, கறி, துகையல் முதலிய இன்னும் எல்லாவித சமையல் பதார்த்தங்களில் உபயோகித்தால் அவைகளின் ருசி மனதைக் கவரச்செய்யும். இதை உபயோகித்தால் நீடித்த அக்கினியாந்தம் அருசி முதலியது குணப்பட்டு சாப்பாடு உட்கொள்ள ஆவலை உண்டாக்கும். இம் மசாலாவை சேர்த்துசெய்தசமையலின் மனோரம்மியமானவாசனை வீடுமுழுவதுமட்டுமல்ல, வெளியில் சுற்றுப்பக்கங்களிலும் பரவும். இதை பிராமணர்களும் மற்றவர்களும் யாதொருதடையுமில்லாமலும் தங்கள் தங்கள் ஆசாரத்திற்கு ஹானியில்லாமலும் நிஸ்ஸந்தேகமாய் உபயோகிக்கலாம். டப்பா 1-க்கு விலை அணா 8. 1 அல்லது 2 டப்பாக்கள் அனுப்ப வி-பி-சிலவு அணா 5 பிரத்தியேகம்.

P. SUBBAROY.

Ayurvedic Pharmacy,
Sri Venkatesa Perumal Koil Sannathy
TANJORE.